செ.வெ.எண்: 15/2021 நாள்: 05.08.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில், முதற்கட்டமாக ”மக்களை தேடி மருத்துவம் ” திட்டம் சேவூர், அவிநாசி, நம்பியாம்பாளையம், துலுக்கமுத்தூர், திருமுருகன்பூண்டி ஆகிய ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உட்பட்ட 25 துணை சுகாதார நிலையங்கள் சார்ந்த கிராமங்களின் பொது மக்கள் பயன் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட உள்ளது.**

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் ”மக்களை தேடி மருத்துவம் ” திட்டத்தினை திருப்பூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்து தகவல் !!!**

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், தெக்கலூர் துணை சுகாதார நிலையத்தில் ”**மக்களை தேடி மருத்துவம்**” திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று ( 05.08.2021) தொடங்கி வைத்தார்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவிக்கையில்,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆகஸ்ட் 5 - ஆம் தேதி இன்று ”**மக்களை தேடி மருத்துவம்**” திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அதே சமயத்தில் **”மக்களை தேடி மருத்துவம்”** திட்டத்தினை காணொளி காட்சி மூலம் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கும் துவக்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில், முதற்கட்டமாக அவினாசி வட்டம் சேவூர், அவினாசி, நம்பியாம்பாளையம், துலுக்கமுத்தூர், திருமுருகன்பூண்டி ஆகிய ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உட்பட்ட 25 துணை சுகாதார நிலையங்கள்

சார்ந்த கிராமங்களின் பொது மக்கள் பயன் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, திருப்பூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவத்துறை ஏனைய துறைகள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட தீவிர கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கொரோனா தொற்று வெகுவாக குறைந்து 100 க்கு கீழ் வந்துள்ளது. தற்பொழுது மக்களுக்கு அரசு மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் தேவையான அளவிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

அருகாமையிலுள்ள கேரளா மாநிலத்தில் கொரோனா தொற்று அதிகாமாக உள்ள போதிலும் தமிழகத்தில் வெகுவாக குறைந்துள்ளது. ஆகவே, அனைவரும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவது ஒவ்வொருவரின் கடமையாகும். அரசே பல்வேறு தளர்வுகளை வழங்கினாலும் நாம் ஒவ்வொருவரும் சுய கட்டுப்பாட்டினை பின்பற்ற வேண்டும்.

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் 4 வது முறையாக தமிழக முதலமைச்சராக இருந்த போது வருமுன் காப்போம் எனும் திட்டத்தை ஏற்படுத்தி மருத்துவமனையில் மட்டும் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்காமல் ஆங்காங்கே கடைக்கோடி கிராமங்களுக்கு சென்று மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆகவே, அத்தகைய திட்டம் இத்திட்டத்திற்கு பொருத்தமாக உள்ளது.

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே தனியார் மருத்தவமனையில் சிகிச்சை சென்ற காலத்தில் ஏழை எளிய மக்களும் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் எனும் நோக்கில் கலைஞர்

காப்பீட்டுத்திட்டம் என்ற முத்தாய்ப்பான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வந்தார்கள்.

”மக்களை தேடி மருத்துவம்” திட்டத்தின் கீழ் அவிநாசி வட்டாரத்தில் முதற்கட்டமாக 3,192 பயனாளிகள் பயன் பெறவுள்ளனர். இந்த திட்டத்தில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களில் சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு அவர்களின் வீட்டிற்கே சென்று சுகாதார பெண் களப்பணியாளர்கள் மூலம் இரண்டு மாதங்களுக்கு தேவையான மாத்திரைகள் கொடுக்கப்படவுள்ளன.

மேலும், படுத்த படுக்கையில் உள்ள நோயாளிகளுக்கு Palliative மற்றும் இயன்முறை மருத்துவம் (Physiotherapy) நோய்த் தடுப்பு பராமரிப்பு செவிலியர் (Home based Palliative Care Staff Nurse) மற்றும் இயன்முறை மருத்துவ சிகிச்சையாளர் (Physiotherapist) மூலம் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின் போது, துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் மரு.ஜெகதீஷ்குமார், அவிநாசி வட்டார மருத்துவ அலுவலர் மரு.சக்திவேல், மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**